## 9. கைவிடாத நண்பர்.

ஒரு அழகான குளம் இருந்தது.
அதில் ஒரு வாத்து வாழ்ந்து வந்தது.
குளத்துக்குப் பக்கத்தில் உள்ள வயலில் கோழி ஒன்றும் வாழ்ந்தது.
வாத்தும் கோழியும் இணை பிரியாத நண்பர்கள்.
இவர்களுக்கு வெட்டுக்கிளி ஒன்றும் கட்டெறும்பு ஒன்றும் இடையில் நண்பர்கள் ஆயின.
இவர்களுடன் குளத்தில் வாழ்ந்த பெரிய தவளை ஒன்றும் சேர்ந்து கொண்டது.
நண்பர்கள் ஆடிப்பாடி மகிழ்வதும், சாப்பிடுவதும், விளையாடுவதுமாக இருப்பார்கள்.
ஒரு சமயம் மழைக்காலத்தில் அதிகமாக மழை பெய்தது.
எங்கு பார்த்தாலும் ஒரே வெள்ள மயம்!
கோழியும் வெட்டுக்கிளியும் எறும்பும் வெள்ளத்தில் தத்தளித்தன.
"எங்களைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!" என்று கத்தின.
இதைப் பார்த்த வாத்து வேகமாக வந்தது, கூடத் தவளையும் வந்தது.
"தவளையே எறும்பையும் வெட்டுக்கிளியையும் உன் மீது ஏற்றிக் கொள், கோழியை நான் என் மீது ஏற்றிக் கொள்கிறேன், இருவரும் வெள்ளத்தை நீந்திக் கடந்து விடலாம், வா!" என்றது வாத்து.
வாத்து சொன்னபடியே தவளையும் செய்ய நண்பர்கள் உயிர் தப்பி மேடான பகுதிக்குச் சென்றனர்.